ஸ்ரீ திரிபுரஸுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராயநம:

# ஆர்ய தர்மம்.

सन्तोषामृततृप्तानां यत्सुखं शान्तचेतसाम् ।
कुतस्तद्धनलब्धानां येधावन्ति वृथा मुहुः ॥

𑌸𑌨𑍍𑌤𑍋𑌷𑌾𑌮𑍃𑌤𑌤𑍃𑌪𑍍𑌤𑌾𑌨𑌾𑌂 𑌯𑌤𑍍𑌸𑍁𑌖𑌂 𑌶𑌾𑌨𑍍𑌤𑌚𑍇𑌤𑌸𑌾𑌮𑍍 ।
𑌕𑍁𑌤𑌸𑍍𑌤𑌦𑍍𑌧𑌨𑌲𑍁𑌬𑍍𑌧𑌾𑌨𑌾𑌂 𑌯𑍇𑌧𑌾𑌵𑌨𑍍𑌤𑌿 𑌵𑍃𑌥𑌾 𑌮𑍁𑌹𑍁𑌃 ॥

ஸந்தோஷமென்று பெயர்வாய்ந்த அமிருதத்தால் திருப்தியடைந்தவர்களும் பகவானால் தமக்கு அளிக்கப்பட்டதே போருமெனக் கருதி கண்டவிடங்களில் ஓடாமல் அடங்கியிருக்கும் மனத்தையுடையவர்களுமான மஹான்களுக்கு யாதொரு ஸுகம் இருக்குமோ அவ்வித சுகமானது தமக்கு எவ்வளவு பொருளிருப்பினும் போதாதென்றும் இன்னும் அதிகம் ஸம்பாதிக்கவேண்டுமென்றும் அதிக அவாகொண்டு அடிக்கடி கண்டவிடங்களில் ஓடுகிறவர்களுக்கு எப்படி உண்டாகும்?

மனிதர்களுக்கு அளவிற்கு அதிகமான ஆசையிருப்பின் அதைக்காட்டிலும் வேறு சத்ரு வேண்டாம். அதினால் எப்பொழுதும கஷ்டத்தையே அடைவார்கள். சித்தத்தில் பொறுமையில்லாவிட்டால் அதினாலும் பல துன்பங்கள் நேரும். ஆகையால் வைராக்யமும் சாந்தியும் அவசியம் தமக்கு வேண்டுமென்று கருதி பகவானைப் பார்த்து

एकाकी निस्पृहश्शान्तः पाणिपात्रो दिगम्बरः ।
कदा शम्भो भविष्यामि कर्मनिर्मूलनक्षमः ॥

𑌏𑌕𑌾𑌕𑍀 𑌨𑌿𑌸𑍍𑌪𑍃𑌹𑌶𑍍𑌶𑌾𑌨𑍍𑌤𑌃 𑌪𑌾𑌣𑌿𑌪𑌾𑌤𑍍𑌰𑍋 𑌦𑌿𑌗𑌮𑍍𑌬𑌰𑌃 ।
𑌕𑌦𑌾 𑌶𑌂𑌭𑍋 𑌭𑌵𑌿𑌷𑍍𑌯𑌾𑌮𑌿 𑌕𑌰𑍍𑌮𑌨𑌿𑌰𑍍𑌮𑍂𑌲𑌨𑌕𑍍𑌷𑌮𑌃 ॥

ஹே சம்போ! பக்தர்களுக்கு சுகத்தைக் கொடுக்கும் ஹே பரமேசுவர! நான் ஒருவனும் ஆசையற்றவனும் மிகவும் சாந்தமான சித்தத்தையுடையவனும் எனது கையைத்தவிர வேறு ஸாதனத்தை அபேக்ஷிக்காதவனும் திகம்பரன் என்று கூறக்கூடிய நிலைமையை அடைந்தவனுமிருந்து கொண்டு ஸகல கஷ்டங்களுக்கும் மூலகாரணமான ஸஞ்சித கர்மாக்களை முற்றிலும் போக்கடித்து எப்பொழுது சுகித்திருப்பேன், என்று ஒரு பெரியார் வேண்டுகிறார். ஆகையால் வைராக்கியமும் பொறுமையும் அவசியம் வேண்டும்.

உபபத்திராதிபர்.

ஆர்ய தர்மம்.
பிரபவ-௵ கார்த்திகை-௴ கஉ

# ஹரிஹராபேதம்.

(627-வது பக்கத்தொடர்ச்சி)

பவிஷ்யத் புராணத்தில்

विष्णोरन्यंतु पश्यन्ति ये मां ब्रह्माणमेवच ।
कुतर्कमतयोमूढाः पच्यन्ते नरकेष्वधः ॥

𑌵𑌿𑌷𑍍𑌣𑍋𑌰𑌨𑍍𑌯𑌂𑌤𑍁 𑌪𑌶𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌯𑍇 𑌮𑌾𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌣𑌮𑍇𑌵𑌚 ।
𑌕𑍁𑌤𑌰𑍍𑌕𑌮𑌤𑌯𑍋𑌮𑍂𑌢𑌾𑌃 𑌪𑌚𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 𑌨𑌰𑌕𑍇𑌷𑍍𑌵𑌧𑌃 ।

எவர்கள் என்னையும் பிர்மாவையும் விஷ்ணுவைக்காட்டிலும் வேருகப் பார்க்கிருர்களோ மூடர்களாயும் விபரீதபுத்தியையுடையவர்களுமான அவர்கள் நரகங்களில் இழிவான ஸ்தானங்களில் ஹிம்ஸிக்கப்படுகின்ருர்கள் என்று பரமேச்வரன் மொழிந்திருக்கிருர்.

விஷ்ணுபுராணத்தில்

भवानहं च विश्वात्मन्नेकमेवहि कारणम् ।
जगतोस्य जगत्यर्थे भेदेनावां व्यवस्थितौ ॥
मत्तोविभिन्नमात्मानं द्रष्टुं नार्हसि शंकर ।
अविद्यामोहितात्मानः पुरुषाभिन्नदर्शिनः ॥

𑌭𑌵𑌾𑌨𑌹𑌂 𑌚 𑌵𑌿𑌶𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑌨𑍍𑌨𑍇𑌕𑌮𑍇𑌵𑌹𑌿 𑌕𑌾𑌰𑌣𑌮𑍍 ।
𑌜𑌗𑌤𑍋𑌸𑍍𑌯 𑌜𑌗𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑍇 𑌭𑍇𑌦𑍇𑌨𑌾𑌵𑌾𑌂 𑌵𑍍𑌯𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑍌.
𑌮𑌤𑍍𑌤𑍋𑌵𑌿𑌭𑌿𑌨𑍍𑌨𑌮𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑍁𑌂 𑌨𑌾𑌰𑍍𑌹𑌸𑌿 𑌶𑌂𑌕𑌰 ।
𑌅𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌮𑍋𑌹𑌿𑌤𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌃 𑌪𑍁𑌰𑍁𑌷𑌾𑌭𑌿𑌨𑍍𑌨𑌦𑌰𑍍𑌶𑌿𑌨𑌃 ।

ஹே ஸர்வஜகத் ஸ்வரூபமாய் விளங்கும் பரமேசுவர! இந்த ஜகத்திற்கு நீரும் நானும் ஒரே காரணம். ஜகத்தில் செய்யவேண்டிய கார்யங்களின் பிரிவால் நாம் வேருக இருக்கிறோம். என்னைக் காட்டிலும் வேருக உம்மைப் பார்க்கமுடியாது. அக்ஞானத்தால்

மோஹத்தையடைந்த புருஷர்கள் வேறாகப் பார்க்கிறார்கள். அது தவறேயாகும், என்று பரமேசுவரரிடம் விஷ்ணு சொல்லுகிறார். சேஷதர்மத்தில்

यथा शिवमयोविष्णुः एवं विष्णुमयश्शिवः ।
यथान्तरं नपश्यामि तथा मे स्वस्तिरायुषि ।

𑌯𑌥𑌾 𑌶𑌿𑌵𑌮𑌯𑍋𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌃 𑌏𑌵𑌂 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌮𑌯𑌶𑍍𑌶𑌿𑌵𑌃 ।
𑌯𑌥𑌾𑌨𑍍𑌤𑌰𑌂 𑌨𑌪𑌶𑍍𑌯𑌾𑌮𑌿 𑌤𑌥𑌾 𑌮𑍇 𑌸𑍍𑌵𑌸𑍍𑌤𑌿𑌰𑌾𑌯𑍁𑌷𑌿 ।

எங்ஙனம் விஷ்ணுவானவர் சிவரூபமாக விளங்குகிறாரோ அவ்விதமே சிவனும் விஷ்ணுரூபமாக விளங்குகிறார். இவர்களுக்குள் பேதத்தை நான் பார்க்காமலிருப்பதால் எனக்கு ஆயுள் அபிவிருத்தியும் க்ஷேமமும் உண்டாகின்றது, என்று பீஷ்மர் கூறியிருக்கிறார். பாத்மபுராணத்தில்

योहि मां विष्णुमव्यक्तं देवं वापि महेश्वरम् ।
एकीभावेन पश्यन्ति तेषां न पुनरुद्भवः ॥

𑌯𑍋𑌹𑌿 𑌮𑌾𑌂 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌮𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌂 𑌦𑍇𑌵𑌂 𑌵𑌾𑌪𑌿 𑌮𑌹𑍇𑌶𑍍𑌵𑌰𑌮𑍍 ।
𑌏𑌕𑍀𑌭𑌾𑌵𑍇𑌨 𑌪𑌶𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌤𑍇𑌷𑌾𑌂 𑌨 𑌪𑍁𑌨𑌰𑍁𑌦𑍍𑌭𑌵𑌃 ॥

எவர்கள் அவ்யக்த ஸ்வரூபமாயிருக்கும் விஷ்ணுவாகிய என்னையும் மஹாதேவரான மஹேச்வரனையும் ஒரே மூர்த்தியாகப் பார்க்கிறார்களோ அவர்களுக்கு மறுபிறப்புக் கிடையாதென்று ஸ்ரீநாராயணன் சொல்லியிருக்கிறார். மஹாபாரதத்தில்

सृष्टिस्थित्यन्तकरणात् ब्रह्मविष्णुशिवात्मिकाम् ।
ससंज्ञां याति भगवान् एकएव जनार्दनः ॥

𑌸𑍃𑌷𑍍𑌟𑌿𑌸𑍍𑌥𑌿𑌤𑍍𑌯𑌨𑍍𑌤𑌕𑌰𑌣𑌾𑌤𑍍 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌶𑌿𑌵𑌾𑌤𑍍𑌮𑌿𑌕𑌾𑌮𑍍 ।
𑌸𑌸𑌂𑌜𑍍𑌞𑌾𑌂 𑌯𑌾𑌤𑌿 𑌭𑌗𑌵𑌾𑌨𑍍 𑌏𑌕𑌏𑌵 𑌜𑌨𑌾𑌰𑍍𑌦𑌨𑌃 ॥

ஸ்ரீ பகவானான ஜநார்தனர் ஒருவரே படைத்தல் காத்தல் அழித்தல் என்கிற மூன்று கர்மாக்களைச் செய்வதால் பிர்மா விஷ்ணு சிவன் என்று சொல்லப்படுகிறார் என்று அறிவிக்கின்றார்.

ஸ்ரீபாகவதத்தில்

अहं च भगवान् ब्रह्मा स्वयं च हरिरीश्वरः ।
न ते मय्यच्युते ज्ञेच भिदामण्वपिचक्षते ॥

ப்ரஹ்மா ச பகவாந் மத்ரூபோ ஹரி: ஸ்வயம் ச மஹேஶ்வர: ।
ந தேஷ்வவ்யதிரேகே ச ஜ்ஞாநவ ஶிஷ்டாஸ்ஸ்வவிசக்ஷதே ॥

பிர்மாவானவர் பகவானுன என்னுடைய ரூபமே. ஹரி என்கிற விஷ்ணுவானவர் ஸாக்ஷாத்ஈசுவரஸ்வரூபமே. சிறந்த குணமுடையோர்களும் ஆஸ்திகர்களாயுமிருக்கும் பக்தர்கள் என்னிடத்திலும் அச்சுதரிடத்திலும் பிர்மாவிடத்திலும் அற்பங்கூட பேதத்தைக் கருதமாட்டார்களென்று சங்கரர் மார்க்கண்டேயரிடம் சொல்லுகின்றார் பிர்மபுராணத்தில்

शिवे संस्थापिते विप्र मम संस्थापनं भवेत् ।
नावयोरन्तरं किञ्चित् एकभावो द्विधाकृतः ॥
योरुद्रस्सस्वयं विष्णुः योविष्णुस्समहेश्वरः ।
उभयोरन्तरं नास्ति पवनाकाशयोरिव ॥
बालाहिनाभिजानन्ति........ ।

ஶிவே ஸம்ஸ்தாபிதே விப்ர மம ஸம்ஸ்தாபநம் பவேத் ।
நாவயோரந்தரம் கிஞ்சித் ஏகபாவோ த்விதாக்ருத: ॥
யோ ருத்ரஸ்ஸ ஸ்வயம் விஷ்ணு: யோ விஷ்ணுஸ்ஸ மஹேஶ்வர: ।
உபயோரந்தரம் நாஸ்தி பவநாகாஶயோரிவ ।
பாலா ஹி நாபிஜாநந்தி

சிவன் பிரதிஷ்டை செய்யப்பட்டால் என்னுடைய பிரதிஷ்டையும் செய்யப்பட்டதுதான். எங்களிருவருக்கும் அற்பங்கூட பேதமே கிடையாது. ஒரே ஸ்வரூபம்தான் இரண்டு விதமாகச் செய்யப்பட்டிருக்கின்றது. எவர் விஷ்ணுவோ அவரே மஹேசுவரர், எவர் ருத்ரரோ அவரே விஷ்ணு. காற்றிற்கும் ஆகாயத்திற்கும்போல் இவ்விருவர்களுக்கும் பிரிவே கிடையாது.

---

உபபத்திராதிபர்.

## திருக்கோவிலூரில் நடைபெற்ற ப்ராம்மண ஸபையும் வர்ணாச்ரம மஹாநாடும்,

சென்ற 16-வருஷங்களாகத் திருக்கோவிலூரில் நடைபெற்றுவரும் ஆர்யதர்மாபிவர்தனீ ஸபையின் வருஷோத்ஸவம் 5—11—27 சனிக்கிழமை காலை 8-மணிக்கு ஸ்ரீ பிரகன்னாயகி

ஸமேத விராட்டஹரேச்வரஸ்வாமி முன் மண்டபத்தில் கூடி யது. அவ்வமயம் ஆர்யதர்மம் பத்திராதிபரும் ஸ்ரீ ஜகத்குரு சங்கராசார்யஸ்வாமிகளின் ஸ்ரீமடம் ஆஸ்தான வித்வானுமாகிய பிர்மஸ்ரீ மஹோபதேசக கவிரத்நம் ப பஞ்சாபகேச சாஸ்திரிக ளவர்கள் தலைமை வகித்தார். ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்யஸ்வாமிகள் அருள் செய்தனுப்பிய பிர ஸாதம் ஷை சாஸ்திரிகளால் கொண்டுவரப்பட்டு வாத்யகோஷத் துடன் ஷை ப்ரஸாதத்தை வரவேற்கப்பட்டு எல்லோராலும் நின்று எற்கப்பட்டது. பிறகு ஷை ஸபையின் கார்யதர்சிகளான பிர்மஸ்ரீ சுப்பிரமணிய சாஸ்திரிகளும் மகா-ா-ா-ஸ்ரீ நடேசய்ய ரவர்களும் சென்றவருஷ அறிக்கையைப்படித்து ஆமோதித்து, ஷைசபையின் பெயரை மாற்றவேண்டிய அவசியத்தைப்பற்றி உபன்யஸித்தனர். பிறகு மாலை 3-மணிக்கு திவான்பகதூர் ஹைகோர்ட் வக்கில் பிர்மஸ்ரீ டி. ஆர். ராமச்சந்திரய்யரவர்கள் அக்ராஸனம் வஹித்து வெகு அழகாக இரண்டுமணி சாவகாசம் ஸ்வதர்மத்தைப்பற்றி உபன்யஸித்தார். பிறகு ஆர்யதர்மம் பத் திராதிபர் பிர்மஸ்ரீ பஞ்சாபகேச சாஸ்திரிகளவர்கள் சாஸ்திரீய விவாகத்தின் மேன்மையைப்பற்றி சுருதி, ஸ்மிருதி, யுக்தி அநுப வங்களைக்கொண்டு பரம நாஸ்திகனும் எற்கும்படி இரண்டுமணி சாவகாசம் உபன்யஸித்தார்.

## வர்ணாச்ரம சபையின் இரண்டாம் நாள்.

ஷை தீர்மானங்கள் பிர்மஸ்ரீ வெ. ஸோமதேவசர்மா அவர் களாலும் மற்றும் பல பண்டிதர்களாலும் ஸாங்கோபாங்கமாக விசாரித்து ஆக்ஷேபங்களுக்கேற்ற பதில் சொல்லப்பட்டுத் தீர் மானிக்கப்பட்டன. மாலை $2\frac{1}{2}$மணிக்கு ஸ்ரீமான் கோபிநாதாசாரி யார் ஆர்யதர்மம் என்பதைப்பற்றியும் ஸ்ரீமான் ஸோமதேவசர்மா முக்கிய சாதனம் என்பதைப்பற்றியும் பிர்மஸ்ரீ பஞ்சாபகேச சாஸ்திரிகள் விவாஹமேன்மை என்பதைப்பற்றியும் அழகாக உபன்யஸித்தார்கள். வக்கீல் ஸ்ரீமான் தாதாசாரியார் அவர்கள் ராமாயண ஆராய்ச்சியும் வர்ணாச்ரமமும் என்பதைப்பற்றிப் பேசி னார். மூன்றாம்நாள் அதிகவவ்யால பிர்மஸ்ரீ வாழ்கொடை சுப் பராம கனபாடிகள் தைத்திரீய உபநிஷத்தைப்பற்றி உபன்யஸித் தார். வக்கீல் நாராயணஸாமி அய்யர் அவர்கள் வந்தனோப சாரம் சொல்ல ஸபை கலைந்தது.

இவ்வாண்டு சென்றவருஷங்களைவிட மிகச்சிறப்பாக நடைபெற்றது. இச்சபையின் பெயர் பிராம்மண தர்மாபிவிர்த்தினீ என மாற்றப்பட்டது. ஸபையின் அங்கத்தினர்களது ஊக்கத்தைப் பிர்ம்மஸ்ரீ வெ. ஸோமதேவசர்மா அவர்கள் கொண்டாடி பண்டிதர்கள் சார்பாக வந்தனம் கூறினர்.

## தீர்மானங்கள்.

6—11—27வ திவான்பஹதூர் பிர்மஸ்ரீ டி. ஆர். ராமச்சந்திரய்யர் அவர்களின் தலைமையின்கீழ் கூடிய பிராமணமஹாசபையினர் அடியிற்கண்ட தீர்மானங்களை நிறைவேற்றினர்.

1. இச்சபையிலுள்ள நாங்களனைவரும் ஸ்ரீ ஜகத்குரு காஞ்சீ காமகோடி பீடாதிபதி ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகளனுப்பிய அனுக்ரஹப்ரசாதத்தை பக்திப்ரணாம புரஸ்ஸரமாக அங்கீகரித்து எங்களது சிஷ்யபக்தியை ஆசாரியபாதங்களில் வணக்கத்துடன் விக்ஞாபனம் செய்கிறோம்.

2. வர்ணாச்ரமதர்மம் நமது பரதகண்டத்திலுள்ள மனுஷ்ய கோடிகளை அத்யாத்மவழியில் நடத்தி மோக்ஷஸாம்ராஜ்யத்தைக் கொடுப்பதற்காக ஏற்பட்டிருப்பதால் அதில் பூர்ண நம்பிக்கை கொண்டிருக்கிறது.

3. விதவாவிவாஹம், ருதுமதிவிவாஹம் முதலியவை சாஸ்திரவிரோதமானதென்றும் தேசக்ஷேமத்திற்கும் இந்திய நாகரீகத்திற்கும் பாரமார்த்திக நிலைமைக்கும் விரோதமானதென்றும் ஆதலால் ஆஸ்திகர் அதை ஆதரிக்கக்கூடாதென்றும் வேண்டுகிறது.

4. தீண்டாதவர்கள் முன்னேற்றத்தில் சாஸ்திரவிரோதமில்லாமல் பூர்ண ஆதரவையளிப்பதோடு அநாவசியமாக அவர்களை ஆலயத்தில் நுழைப்பித்து அமைதியைக் கொடுக்கக்கூடாதென்றும் எச்சரிக்கிறது.

5. கொஞ்சகாலமாக மனுஸ்மிருதியை சிலர் அதர்மசாஸ்திரமெனக் கூறுவதையும் அதை அரசாங்கத்தார் அழித்துவிட வேண்டுமென்று கூறுவதையும் கண்டித்து இதுபோன்ற மததூஷணையைச் செய்யாமலிருக்கும்படி அவர்களை வேண்டுகிறது.

6. சென்னையில் நடக்கப்போகும் வர்ணாச்ரமதர்ம மஹாநாட்டை ஆதரிப்பதோடு அதற்கு ப்ரதிநிதிகளை இச்சபையிலிருந்து அனுப்பத் தீர்மானிக்கிறது.

7. விவாஹவயது முதலிய மதவிஷயங்களைச் சட்டசபையில் விவாதிக்கலாகாது என அரசாங்கத்தை வேண்டுகிறது.

8. மிஸ்மேயோ எழுதிய இந்திய தாய் என்ற நூலை இச்சபை கண்டிக்கிறது.

கே. ஆர். சுப்பிரமணிய சாஸ்திரி,
காரியதாசி.

---

## லோகக்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி
# மஹிமப்பிரகடனம்.

(615-வது பக்கத்தொடர்ச்சி)

अत्र ब्रह्मसमश्नुतेति विदुषां मुक्तिः पुनः श्रूयते
तत्सत्यं गुरुरेषभाति जगतामानन्ददायी सदा ।
आनन्दीनभवेत् कथं नुविदुषां ज्ञानस्य दानं दिशेत्
ब्रह्मानन्दचिदात्मकं हि कथितं चानन्दवल्यादिषु ॥

அத்ர ப்ரஹ்மஸமச்நுதேதி விதுஷாம் முக்தி꞉ புந꞉ ச்ரூயதே
தத்ஸத்யம் குருரேஷபாதி ஜகதாமாநந்ததாயீ ஸதா ।
ஆநந்தீநபவேத் கதம் நுவிதுஷாம் ஜ்ஞாநஸ்ய தாநம் திசேத்
ப்ரஹ்மாநந்தசிதாத்மகம் ஹி கதிதம் சாநந்தவல்யாதிஷு ॥

பிர்மத்தை நல்ல குருவினிடத்திலிருந்து தெரிந்துகொண்ட வித்வான்களுக்கு இங்கே ஜீவன்முக்தியும் ஸாக்ஷாத்முக்தியுமுண்டாகிறதென்று உபநிஷத்துக்களில் கூறப்படுகின்றது. இப்போது உண்மையென்று பிரத்யக்ஷமாகவும் தெரிகிறது. எப்படி என்றால் இந்த குருவானவர் தன்னை அன்புடன் ஆச்ரயிக்கிறவர்களுக்குப் பூர்ணமான ஆநந்தத்தையும் க்ஞானத்தையும் கொடுக்கிறதினால் தெரியவருகிறது. இந்த குருவானவர் தான் ஆநந்தியாகவும் க்ஞாநியாகவும் இல்லாவிட்டால் எப்படிப் பிறருக்குச் சந்தோஷத்தைக் கொடுக்கமுடியும்? உபநிஷத்துக்களில் க்ஞாநாநந்தஸ்வரூபமாகவே பிர்மத்தைச் சொல்லியிருப்பதால் இந்தகுரு பிர்மத்தைக்காட்டிலும்வேறு அல்லஎன்பதுநன்றாய்விளங்குகிறது.

आत्मावारेति विद्यास्थितिमधिगतवान् सद्गुरोः वीक्षणादेः
प्राप्तोऽहं ब्रह्मणैक्यं सुसमयनियतं नित्यसिद्धस्वरूपम् ।

सर्वज्ञपीठसंम्राट्गुरुवरयतिराट् शङ्कराचार्यपादान्
दृष्ट्वा स्तुत्वाच नत्वा रसनिधिरभवं चित्सुखानन्दपूर्णः ॥

ஸர்வஜ்ஞபீடஸம்ராட்குருவரயதிராட் ஶங்கராசார்யபாதாந் த்ருஷ்ட்வா ஸ்துத்வா ச நத்வா ரஸநிதிரபவம் சித்ஸுகாநந்தபூர்ண: ॥

இந்த குருவினுடைய கடாக்ஷத்தாலும் அனுக்ரஹத்தாலும் ஆத்மவித்யையை நன்றாய்த் தெரிந்துகொண்டு ஆத்மநிஷ்டனாகி, வேதாந்தத்தில் சொல்லுகிறபடி நித்யஸித்தமான பிரம்மாத்மபாவமாகிற பிரம்மத்தோடு ஒன்றாயிருக்கும் தன்மையையும் அடைந்தது றகுச்சமானமாகவே இருக்கின்றனன். இந்தக்குருவைப் பார்த்து ஸ்தோத்திரம் செய்தும் வணங்கியும் சித்ஸுகானந்தம் நிறைந்தவனாகவுமிருக்கின்றனனென்று சுருங்கின கருத்து.

मोक्षोऽस्मिन् विनिवृत्तिरेव कथिता नत्वेत्य संज्ञाद्यया
चैतन्यं विलसत्सदेति सुमते किं दूषयद्भिर्मुधा ।
तत्तन्त्रे कनकायसीहिनिगलौ पुण्यं च पापादिवै
तद्वत्संसृतिमोक्षयोरपिभवेत् भूयोऽल्पत्वांछादिना ॥

மோக்ஷோஸ்மிந் விநிவ்ருத்திரேவகதிதா நத்வேத்ய ஸம்ஜ்ஞாத்யயா சைதந்யம் விலஸத்ஸதேதி ஸுமதே கிம் தூஷயத்பிர்முதா । தத்தந்த்ரே கநகாயஸீஹிநிகளே புண்யம் ச பாபாதிவை தத்வத்ஸம்ஸ்ருதிமோக்ஷயோரபிபவேத் பூயோல்பத்வாம்ஶாதிநா ॥

இந்த நல்லமதத்தில் அக்ஞானம் விலகுகிறதென்பது மோக்ஷமென்றும் எப்பொழுதும் ஸ்வயம்ப்ரகாசமாகவே சித்ரூபமான ஆத்மா இருக்கிறதென்றும் பிருஹதாரண்ணியகம் முதலான பல உபநிஷத்துக்களில் நன்றாய் விளக்கியிருப்பதை (சொல்லியிருக்கிறதை) வீணாகத் தூஷிப்பது நியாயமல்ல. பிறருடைய மதத்தில் புண்ணியம் தங்கவிலங்குபோலும் பாபம் இரும்புவிலங்குபோலும் சொல்லிப்பரலோகமான ஸ்வர்க்காதிகளில் ஸ்திரீஸங்காதிகளிருப்பது நாகமென்று சொல்லிவிட்டு மோக்ஷத்திலும் ஸ்திரீ

களுடனும்சாப்பிட்டுக்கொண்டும் விளையாடிக்கொண்டுமிருக்கிறான் முக்தனென்று சொல்லியிருப்பதைப் பார்த்தால் ஸ்வர்க்கபோகத்தைக் காட்டிலும் அதிகமான போகமென்றே ஏற்படுகிறபடியால் முக்தியென்பது அதிகமாக ஆசைப்பட்டவனுக்கு அதிகமான ஸம்ஸாரமென்கிறதுபோல் விளங்குகிறது. ஆகையால் அத்வைத மதமோக்ஷம்தான் நன்கு.

एवं लोकगुरं स्तुवन्ति विबुधा मूर्खास्तथा पामरा:
सर्वे ब्रह्ममुखास्तथा सुललना नीचाश्च जात्यन्तरा: ।
सर्वेषां स्वमनोरथानुगुणत: सल्लापदानादिभि:
सर्वान् प्रीणयतीह राजति गुरुस्सर्वार्थिकल्पद्रुम: ॥

𑌏𑌵𑌂 𑌲𑍋𑌕𑌗𑍁𑌰𑍁𑌂 𑌸𑍍𑌤𑍁𑌵𑌨𑍍𑌤𑌿 𑌵𑌿𑌬𑍁𑌧𑌾 𑌮𑍂𑌰𑍍𑌖𑌾𑌸𑍍𑌤𑌥𑌾 𑌪𑌾𑌮𑌰𑌾𑌃 𑌸𑌰𑍍𑌵𑍇 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌮𑍁𑌖𑌾𑌸𑍍𑌤𑌥𑌾 𑌸𑍁𑌲𑌲𑌨𑌾 𑌨𑍀𑌚𑌾𑌶𑍍𑌚 𑌜𑌾𑌤𑍍𑌯𑌨𑍍𑌤𑌰𑌾𑌃। 𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑌾𑌂 𑌸𑍍𑌵𑌮𑌨𑍋𑌰𑌥𑌾𑌨𑍁𑌗𑍁𑌣𑌤𑌃 𑌸𑌲𑍍𑌲𑌾𑌪𑌦𑌾𑌨𑌾𑌦𑌿𑌭𑌿𑌃 𑌸𑌰𑍍𑌵𑌾𑌨𑍍 𑌪𑍍𑌰𑍀𑌣𑌯𑌤𑍀𑌹 𑌰𑌾𑌜𑌤𑌿 𑌗𑍁𑌰𑍁𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑌾𑌰𑍍𑌥𑌿𑌕𑌲𑍍𑌪𑌦𑍍𑌰𑍁𑌮𑌃 ॥

இந்த லோககுருவைப் பண்டிதர்களும் மூடர்களும் ஞானமில்லாதவர்களும் பிராம்மண க்ஷத்திரிய வைசய சூத்திரர்களும ஸ்திரீகளும் அதற்கும் கீழ்பட்ட நீசர்களும வேறுஜாதி மதமுள்ளவர்களும் ஸ்தோத்திரம் பண்ணுகிறார்கள். எல்லாருக்கும் தங்கள் தங்களுடைய அபிப்பிராயத்துக்குத் தக்கபடி அன்பான பேச்சுக்களும் உபதேசங்களும சம்மானங்களும செய்துகொண்டு எல்லாரையும் சந்தோஷப்படுத்திக்கொண்டு நாலுவிதமான புருஷார்த்தங்களையும் கேட்கிறவர்களுக்குப் புதிதான கல்பகமரம்போல் பூலோகத்தில விளங்குகிறார் என்று கருத்து.

आदिशङ्करगुरोरमुष्यच द्वैतमेव कथयन्ति सज्जना: ।
अन्यदीयतनुसङ्गमादिकं नात्र शङ्करगुरौ विराजति ॥

𑌆𑌦𑌿𑌶𑌂𑌕𑌰𑌗𑍁𑌰𑍋𑌰𑌮𑍁𑌷𑍍𑌯𑌚 𑌦𑍍𑌵𑍈𑌤𑌮𑍇𑌵 𑌕𑌥𑌯𑌨𑍍𑌤𑌿 𑌸𑌜𑍍𑌜𑌨𑌾𑌃। 𑌅𑌨𑍍𑌯𑌦𑍀𑌯𑌤𑌨𑍁𑌸𑌙𑍍𑌗𑌮𑌾𑌦𑌿𑌕𑌂 𑌨𑌾𑌤𑍍𑌰 𑌶𑌂𑌕𑌰𑌗𑍁𑌰𑍌 𑌵𑌿𑌰𑌾𑌜𑌤𑌿 ॥

ஆதியில் அவதரித்த லோககுருவுக்கும் இந்த குருவுக்கும் சாஸ்திரத்தால் பேதமில்லாவிட்டாலும் நல்ல வித்வான்கள பேதமுண்டென்றே சொல்லுகிறார்கள். அதற்குக்காரணம் ஆதிகுருவினுடைய சரித்திரத்தில் ஸரஸ்வதியை ஜயிக்க உத்தேசித்து வேறு

சரீரத்தில்தான் புகுந்து ச்ருங்காரசாஸ்திரம்கூட நன்ருய்த் தெரிந்ததாகக் கூறப்படுகிறது. இப்போது லோககுருவுக்கு அவ்விதம் வேறு சரீரசம்பந்தம்கூடக் கிடையாததால் நன்ருய் விளங்குகிற இந்த குருவினிடத்தில் குணமே நிறைந்திருக்கிறதென்று கருத்து.

कामारिरप्यात्मकाम: देहभासा प्रकाशते ।
अपञ्चबाणोवाग्धन्वा सर्वान्स्वीयान् करोतिच ॥
காமாரிரப்யாத்மகாம: தேஹபாஸா ப்ரகாசதே ।
அபஞ்சபாணோவாக்தன்வா ஸர்வாந்ஸ்வீயாந் கரோதிச ॥

இந்தகுரு நித்தியபிரம்மசாரியானபடியால் ருத்திரனேடு அபேதமானதாலும காமனுககுச் சத்துருவாயிருந்தாலும் சரீர தேஜஸ்ஸால் ஆத்மாவாலேயே காமனுகப் பிரகாசிக்கிருர். ஐந்துபாணமில்லாதவராஞலும் தன்வாக்காகிற தநுஸ்ஸாலேயே எல்லாரையும் தனக்கு ஸ்வாதீனமாகச் செய்துகொள்ளுகிருர் என்று கருத்து.

काञ्चीवाक्पीठसम्राजः जगद्गुरुपदे स्थिताः ।
चन्द्रमौलीश्वरार्चाप्तनित्यानन्दा जयंत्विमे ॥
காஞ்சீவாக்பீடஸம்ராஜ: ஜகத்குருபதே ஸ்திதா: ।
சந்த்ரமௌலீச்வரார்சாப்த நித்யாநந்தா ஜயந்த்விமே ॥

காஞ்சி காமகோடி பீடாதிபதியாய லோககுருஸ்தானத்தில் எழுந்தருளியிருககிறவர்களாயும ஸ்ரீ சந்திரமௌளி ஸ்வாமியினுடைய அநவரதபூஜையாலடையப்பட்ட நித்தியாநந்தாளாயுமிருககிற இந்த ஆசார்யாளானவர்கள் எப்பொழுதும் ஜயத்துடன் வாழ்கவேணும்.

காளி பக்த வித்வான ரங்காசாரியார்,
தாஞதிகாரி, புதுககோட்டை

## பிராமணேத்தமர்களுக்கு ஓர் விக்ஞாபனம்.

நிகழும் ப்ரபவ வருஷம ஐப்பசி-மீ 21உ பானுவாரத்தன்று நான் திருககோவிலூருககடுத்த கீழையூர் வீரட்டஹாஸேச்வர சுவாமி ஸந்நிதி முனமண்டபத்தில் மாலே 2-மணிக்குககூடியிருந்த பிராம்மணசபைககுச் சென்றிருந்தேன. அச்சபையில் கனம T. R ராமச்சந்திர அய்யர் அவர்கள் அக்ராசனத்தின்கீழ் பிர்மஸ்ரீ ஸோமதேவசர்மா அவர்களும் பிர்மஸ்ரீ பஞ்சாபகேச சாஸ்திரிகளவாகளும் இன்னும் அநேக மகாஜனங்களும் அவ்விட

யிருந்ததில் 10-ல் ஒருபங்குதான் வைதீகமாயிருப்பவர்கள். நானோ ஒரு குக்கிராமவாசி, எனக்கோ கிரந்தாக்ஷரம் தெரியாது. இப்பேர்ப்பட்ட நான் இச்சமூஹத்தில் சாயங்கிரம் சுமார் 6-மணிக்கு அங்கிருந்தவர்கள் எல்லோரும் ஒருங்கே பிராமண்ணியம் தவராமல் நடந்த அதிசயத்தைக் கண்ணுற்றுக் கவனிக்கில் இதற்கெல்லாம் காரணம் இச்சபையே என்று யோஜித்தேன். இக்கலிகாலத்தில் பிராம்மண்யம் அநேகமாய்க் கெட்டுப்போயிருக்கிறது. அதை முன்னுக்குக் கொண்டுவர இப்பிராமண ஸமூகமே முக்கியமானது.

ஒரு தடாகத்தில் பதினாயிரம் அல்லிபுஷ்பம் மத்தியில் ஒரு தாமரைப்புஷ்பமிருந்தால் மேற்கண்ட அல்லிபுஷ்பத்திற்கு எப்படி மகிமையுண்டோ அதைப்போல யாதொன்றும் தெரியாத என்னைப்போல் அக்ஞர்களாய் இருந்தாலும் சபை ஒன்றிருந்தால் அதன்மூலம் மஹாத்மாக்கள் வருவார்கள். அதனால் நாமும் நற்கதியடைய மார்க்கமேற்படும்.

ஆகையால் பிராமணோத்தமர்களனைவரும் அவரவர் வாஸஸ்தானங்களில் ஒருசபை கூடவேணுமாய் அநேககோடி நமஸ்கார பூர்வமாய் வேண்டுகிறேன். ஸ்ரீமான் கள்ளக்குரிச்சி வக்கீல் தாத்தாச்சாரியார்போன்ற பெரியாரவர்கள் இந்த வேலையைத் தனியாகச் செய்வதை ஒரு சபைமூலம் நடத்தல் மிகச் சிறந்ததாகும்.

கே. ஆர். ஸ்ரீநிவாஸய்யர்,
கள்ளக்குறிச்சி.

ஸ்ரீ சந்திரமௌளீச்வராய நம:

# ஸ்ரீசாரதாநவராத்திரிலக்ஷார்ச்சனை.

சென்னை தம்புசெட்டித்தெரு 119ந இலக்கமுள்ள ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள் அவர்கள் ஸ்ரீமடத்தில் சென்ற ஆண்டுகளைப்போல் இவ்வாண்டும் ஸ்ரீமதாசார்ய அநுக்ரஹத்தை முன்னிட்டு லோகக்ஷேமார்த்தமாக லக்ஷார்ச்சனை ஆரம்பிக்கப்பட்டு ஆரம்பத்தில் விதிப்படி விக்னேச பூஜை, ஸங்கல்பம், ஹவனம், அகண்டம் கலசஸ்தாபனம், நவாவரணபூஜை முதலியவை அநுஷ்டிக்கப்பட்டன, பிரதிதினமும் வேதபாராயணம், தேவிபாகவதம், ராமாயணம், தேவி மாஹாத்மியம் முதலிய பாராயணங்கள் செய்யப்

பட்டன. காலை மாலைகளில் பத்து ஸஹஸ்ரநாமத்துக்குமேல் புஷ்பம் குங்குமம் இவைகளால் தக்க நைவேத்யத்துடன் நடந்தேறியது. இரவு 12-மணிவரையில் எண்ணிறந்த பக்தர்கள் வந்து தர்சித்து ப்ரஸாதம் பெற்றுச்சென்றனர். லக்ஷத்திற்கு மேல் சில அர்ச்சனைகளும் நடந்தபிறகு உத்ஸவபூர்த்தியாகிய விஜயதசமியன்று காலை மஹந்யாஸ உபநிஷத் பூர்வம் ஸ்ரீ பகவத் பாத விக்ரஹத்துக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகளும் ஸ்ரீமதாசார்ய ஸஹஸ்ரநாமார்ச்சனையும் நடந்தது. பிறகு தம்பதிபூஜையும் பாராயணக்காரர்களுக்கும் மற்றும் பல பிராமணோத்தமர்களுக்கும் அறுசுவையுடன் ஸமாராதனையும் நடந்தது. அன்றிரவு 8-மணிக்கு முன்னே வாத்யகோஷங்களுடன் பல விருதுகள் செல்ல, பின்னே வேதபாராயணம் நடக்க, இடையே, அத்யத்புதமாக ஸ்ரீமதாசார்ய விக்ரஹம் திவ்யவிமானத்தில் அலங்கரிக்கப்பட்டு வீதி உத்ஸவம் புறப்பட்டது பல பக்தமணிகள் சூழ,எல்லோருக்கும்சந்தன தாம்பூலம் அளித்து இரவு 12-மணிக்கு ஸ்ரீமடம் வந்துசேர்ந்தவுடன் பாராயணக் காரர்களுக்கு ஸம்பாவனையும் பக்தர்களுக்கு ப்ரஸாதங்களும் வழங்கப்பட்டன. (10-10-27) பௌர்ணமியன்று காலையில் ஸ்ரீ பகவத்பாதாளுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகளும் 10-மணிக்குமேல் ஏழைகளுக்குக்கஞ்சியும், வார்க்கப்பட்டு விடாயாத்தி உத்ஸவத்துடன் இவ்வருஷத்திய லக்ஷார்ச்சனை மஹோத்ஸவம் அதிவிமர்சையாக நடந்தேறியது.

தீ, கீ. ராமநாததீக்ஷிதர்.

## பொன்மலையில் பிரம்ஸ்ரீ போலகம் சுந்தரசாஸ்திரிகள் அவர்களால் செய்யப்பட்டுவருகிற ஸ்ரீபகவத்கீதோபந்யாஸத்தின் சுருக்கம்.

(541-வது பக்கத்தொடர்ச்சி)

அத் 9. சு 1. ஸ்ரீ பகவான் ஞானயோகத்தை விஸ்தாரமாகச் சொல்லுகிறார். தர்மம் மந்திரம் இவைகளை ரஹஸ்யமாக வைத்துக்கொள்ளவேண்டியது. பக்தியோகம் ரஹஸ்யமாக வைத்துக்கொள்ளவேண்டியது. எல்லாவற்றையும்விட அதிரஹஸ்யமாக வைத்துக்கொள்ளவேண்டியது இந்த ஞானயோகம். அப்படிப்பட்ட ஞானத்தை விஞ்ஞானத்தோடு அசூயைமுதலிய தோஷங்களற்ற உனக்கு நீ ஸம்ஸாரபந்தத்திலிருந்து விடுபடும் பொருட்டு செவ்வையாய்ச் சொல்லுகிறேன்,

சு 2. இந்த ஞானம் வித்யைகளுக்கெல்லாம் ஸ்ரேஷ்டம் மற்ற வித்யைகளெல்லாம் ஜீவனோபாயத்திற்கு மாத்திரம் அதாவது இந்தஸ்தூலசரீரத்தைப் போஷிப்பதற்குத்தான் உபயோகப்படும். இதுவோ ஈச்வரனைத்தெரிவித்துக்கர்மத்தை பஸ்மமாக்கி அக்ஞானத்தை நிவர்த்திசெய்து ஜென்மாவராமல் தடுத்து மோக்ஷத்தைக்கொடுக்கவல்லது தேவ மனுஷ்ய அஸுரராஜாக்களால் ரக்ஷிக்கப்பட்டிருக்கிறது. அதினாலும் ராஜவித்யை கீழ்சொன்னபடி மிகவும் ரஹஸ்யமானது. பிரத்யக்ஷமாக அறியத்தகுந்தது. ஸகல தர்மத்தினாலும் ஏற்பட்டது அனுஷ்டிப்பதற்கு மிகவும் சுலபமானது. அனுஷ்டிக்கும் காலத்திலும் கடைசிகாலத்திலும் சுகம் ஏற்படுவதோடுகூட அழியக்கூடாத பலத்தைக் கொடுக்கக்கூடியது. ஆகையால்மிகவும் உத்தமமானது.

சு 3. ஓ அர்ஜுனா இந்த பக்தியோடுகூடிய ஞானமாகிற தர்மத்தை நம்பாமலிருக்கிற புருஷர்கள் என்னையடையாமல் ம்ருத்யுவுடன்கூடிய ஸம்ஸாரத்தில் துக்கத்தை அடையும்பொருட்டுத் திரும்பிவிடுகிறார்கள்.

சு 4-5. இனி தன் சுத்தஸ்வரூபத்தைச் சொல்லுகிறார். ஜகத்முழுவதும் என்னால் வியாபிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் நான் ஒருவருக்கும் நன்றாய்த் தெரியாமல் இருக்கிறேன். நான் ஜகத்தினிடத்திலில்லை. அதாவது எனக்கு ஆதாரம் அணுக்களிடத்திலில்லை. என்னிடத்தில் ஒன்றுமில்லை. இந்த பரஸ்பர விரோதமான சக்திதான் என் மாயை. இந்த ப்ராணிகளின் ஸம்பந்தம் என் ஸ்வரூபத்தில் கிடையாது. அதாவது ஸகலமும் மாயையென்னும் அதின் ஸம்பந்தம் தனக்குக் கிடையாதென்றும் தாத்பர்யம்.

சு 6. ஆகாயத்திலிருக்கும் காற்று ஆகாயத்தில் ஸம்பந்தத்தையடையாததுபோல் ஸகல ஜகத்தும் என்னிடத்தில் ஒட்டாமலிருக்கின்றன.

சு. 7. இப்பொழுது மாத்திரமல்லபிரளயகாலத்திலும் நான் மாறுதலையடைகிறதில்லை. ஆனால் அப்பொழுது ஸகல ஜீவராசிகளும் என் மாயையில் லயமடைந்து, கல்ப்ப ஆரம்பத்தில் மறுபடியும் நான் சிருஷ்டிக்கிறேன்.

சு. 8. என்னுடைய மாயையை ஸ்வீகரித்துப் பிராசீன கர்மத்தையனுஸரித்து ஸகல ஜீவராசிகளும் என் ஈக்ஷணத்தால் மாயையிலிருந்து புறப்படுகிறார்கள்.

சு. 9. எனக்குக் கலக்கம் ஒருநாளும் கிடையாது எத்தனை கர்மங்களை நான் செய்தாலும் உதாஸீனனாகவிருக்கிறேன், ஆகையால் நான் அவைகளில் சம்பந்தப்படுகிறதில்லை.

சு. 10. பிரகாசமாகவிருக்கிற என் ஸந்நிதியில் பிரகிருதி சேஷ்டிக்கிறது. அதாவது பிரபஞ்சத்தை உண்டு பண்ணுகிறது காந்தத்தின்முன் இரும்புத்தூண்கள் சேஷ்டிக்கிறதுபோல் தான் மாயை ஜடம் ஆகையால் ஸ்வயமாக சேஷ்டிக்க அதற்கு சக்தி கிடையாது

சு. 11. ஆகையால் நான் செய்கிறேன் நான் செய்யவில்லை எனும் இரண்டு வாக்கியங்களும் பொருந்துகின்றன. இந்த தத்வத்தைத்தான் தெரிந்துகொள்ளவேண்டும். இதைத் தெரிந்து கொள்வது மிகவும் சிரமமாகையால் எல்லோரும் சுலபமாகத்தியானம் செய்யும்பொருட்டு திவ்யமங்களமாகிற இந்த என் ஸ்வரூபத்தை ஸ்வீகரிக்கிறேன் அப்படியிருந்தும் என் பரம தத்வத்தையறியாத மூடர்கள் என்னை ஸாதாரண மனுஷ்ய தேஹத்தையாசிரயித்திருக்கிறதாகவே அவமதிக்கிறார்கள். அவர்களின் சித்தத்திலிருக்கும் கல்மஷம்தான் இதற்குக் காரணம்

சு. 12. இந்த மூடர்கள் அக்ஞானத்தினாலும், அனாதரவினாலும், நிந்தையாலும் பகவானை ஸ்மரிக்கிறதில்லை. அக்ஞானமுள்ளவனுக்கு மோக்ஷம் கிடையாது. அனாதரவு செய்கிறவனுக்குக் கருமத்தின் பலன்கூட நஷ்டமாகிவிடும். நிந்தை செய்கிறவன் இகலோக பரலோக சுகானுபவம் ஒன்றுமின்றி நரகத்தையடைகிறான்.

சு. 13. சிலபேர்கள் கீழ்ச்சொன்ன மோஹினி ஆஸுரராக்ஷஸ குணமற்றவர்களாய் தைவீககுண ஸம்பத்துள்ளவர்களாகி பிரபஞ்சத்திற்குக் காரணமானதும் நாசமற்றதுமான என்னையே ஸதாஸர்வகாலம் பஜிக்கும் மஹாத்மாக்களாக இருக்கிறார்கள்

சு. 14. அதாவது வெளியில் அவர்கள் மனது பிரவர்த்தித்தால் பகவத் பாவனையோடு படம், குரு பிராமணாள் இவர்களை நமஸ்கரிக்கிறார்கள். என்னுடைய லீலைகளையே கீர்த்தனம் செய்கிறார்கள். இப்படிச் செய்யும்போது பிரம்மசரியம் முதலிய விருதங்களை அனுஷ்டித்துக் கெட்ட குணங்களை விட்டு விடுகிறார்கள்.

சு. 15. பின்னும் சிலர் ஸர்வாத்மகனான என்னை ஞானமாகிற எக்ஞத்தினாலும் பேதபாவனையினாலும் அபேதபாவனையினா

லும் உபாஸிக்கிறார்கள். வேதாந்த அர்த்தத்தை விசாரித்து அதனால் ஏற்படும் பகவத்ஸ்வரூபத்தை அடிக்கடி தியானத்தால் அனுபவிக்கிறார்கள். சிலர் ஏகமாக தன் மனதினிடத்திலும் சூரியனிடததிலும் எங்கும் வியாபித்திருக்கும் சைதன்யத்தை உபாஸிக்கிறார்கள்.

சு. 16. வேதோக்தமான அக்னிஷ்டோமாதிகளும், யக்ஞாதிகளும், சிராத்தாதிகளும், மருந்தும் அக்னியும் ஹோமமும் திரவியமும நான்தான்.

சு. 17. இந்த ஜகத்துக்குத் தாயும் தகப்பனும் பிதாமகனும் அறியவேண்டிய வஸ்துவும், பரிசுத்த வஸ்துவும் ஓங்காரமும், ரிக், யஜுஸ் ஸாம வேதங்களும் நானே.

சு. 18. அடையத் தகுந்தவனும், போஷகனும், ஏவுகிறவனும் சாக்ஷியும் இருப்பிடமும் சரணமடையத் தகுந்தவனும், பிரியத்தைச் செய்கிறவனும் சிருஷ்டி ஸ்திதிலய கர்த்தாவும் லயமடையும் ஸ்தானமும் நாசமற்ற விதையும் நானே. கீழ்ச் சொன்னப் பிரகாரம் விச்வதோமுகமாக என்னை அநேகர் அறிகிறார்கள். சூரியவெப்பத்தை உண்டாக்குகிறவன் மழையை வர்ஷிக்கிறவன், வர்ஷிக்காமல் தடுக்கிறவன், அன்னம் மிருத்யு ஸ்தூலம ஸூக்ஷ்மம எல்லாம் நானே. மூன்றுவேதங்களை யறிந்தவர்கள், யக்ஞங்களினால் என்னைப் பூஜித்து சோமபானம் செய்து பாபமற்றவர்களாய் சுவர்க்கலோகத்தை அபேக்ஷிக்கிறார்கள். அவர்கள் தேவேந்திரலோகத்தை அடைந்து உத்தம போகங்களை யனுபவிக்கிறார்கள். (இன்னும் வரும்)

வி. என். ராமநாதன்.

---

# வர்ணாச்ரம மஹாசபை.

இதைச் செவ்வனே நடாத்திவைக்க ஆதரவைக்கோரிப்பிரசாரம செய்ய சிலவிடங்களுக்குச் சென்றோம. எல்லா வர்ணத்தாரிடமிருந்தும் பூர்ண ஆதரவு கிடைத்திருக்கிறது. ஏராளமான பிரதிநிதிகள் வருவதாக வாக்களித்தனர். உபசரணை சங்கத்தில் பிரபல காங்கிரஸ் வாதிகள் சேர்ந்திருக்கின்றனர். காங்கிரஸ் பந்தலிலேயே நடக்கலாம்- உபசரணை ஸங்கத்திற்கு 5—0—0, பிரதி

நிதிக்கு 1—0—0, பிரேக்ஷகருக்கு 0—8—0, கட்டணம் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. 154, தம்புசெட்டி வீதியில் செலுத்தி அச்சு ரசீது பெறலாம். பின்னர் பிரவேசபத்திரமளிக்கப்படும். உபசரணையங்கத்தினரும் பிரதிநிதிகளுமே தீர்மானம் கொண்டு வரவோ, ஆமோதிக்கவோ, வாக்களிக்கவோ உறிமையுள்ளவராவர். டிஸம்பர் 15வுக்கு மேல் அனுப்பும் தீர்மானங்கள் இடம்பெறு. வேதஸ்மிருதி புராண சிஷ்டாசார ஸம்ப்ரதாயங்களுக்கிணங்கி கையெழுத்திட்டு கட்டணம் செலுத்துபவரே, அங்கத்தினராவர். அதற்கு முறணான தீர்மானங்களுக்கிடமில்லை.

ஓர் ஆஸ்திக வைதிக வைச்யகுலசிகாமணி உபசரணைத் தலைமையை ஏற்பர். தர்பங்கா மஹாராஜா முதலிய மிகப் பிரபல வர்ணாச்ரமிகளுக்குஸஹாயத்தைக்கோறி அழைப்புப்பத்திரம் அனுப்பப்பட்டிருக்கிறது, அவகாசமும் ஸௌகரியமுமிருந்தால் மஹாத்மாஜீயையழைத்து வாதப்பிரதிவாதம நடைபெறும். ஏனையோர் தங்களது ஆக்ஷேபங்களை விளக்கி பதிலுக்குத் தபால்செலவுடன் உபசரணை ஸபைக்கு எழுதினல் சாஸ்திரஸம்மதமான பண்டிதர்களது பதிலளிக்கப்படும்.

எந்த ஜாதியையும் இகழ்ந்தோ சண்டைக்கழைத்தோ உத்தமமான வர்ணாசாமத்தின் அத்யாத்மநிலையைக் குறைக்கத்தக்க எந்தத் தீர்மானமும் காரியமும் பேச்சும் நடைபெறுது. எக்காரணத்தாலோ வாமுடியாதவர்கள் செய்யும் தன் உதவியும் தீர்மானமும் வியாஸமும் வரவேற்கப்பட்டு தக்க மதிப்பைப் பெறும். வைதிகமுறைமைக்கு முறண்படலாகாதென போஜனவசதியை ஸபை ஏற்றுக்கொள்ளவில்லை. இடவசதி விரும்புவோர் முன்னதாகவே தெரிவித்துவிடவேண்டும். கீழ்கண்டபடி வர்ணாசிரம தர்மத்தில் பூர்ண நம்பிக்கையுள்ளவர்களும் ஸபையின் சட்டதிட்டங்களுக்குட்பட்டவர்களுமே இதில் இடம் பெறுவர். அன்புடன் எவர் அனுப்பும் யோசனைகளும் மிக்க வணக்கத்துடன் ஏற்று ஸபை யோசனையைப் பெறும் தனித்தனி அழைப்பும் அறிவிப்பும் அனுப்ப முடியாததால் ஆஸ்திக சிகாமணிகளனைவரும் இத்துடன் ஒற்றுழைத்து தர்மத்தைக்காக்க முன் வரும்படி பிரார்த்திக்கிறேன்.

ஸ்ரீவத்ஸ வே. ஸோமதேவசர்மா.